විෂය අංකය / பாட இலக்கம்: **32**

විෂයය / பாடம்: **வணிகக் கல்வி**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 2 |
| 02. | 2 | 12. | 5 | 22. | 1 |
| 03. | 4 | 13. | 4 | 23. | 4 |
| 04. | 1 | 14. | 4 | 24. | 3 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 5 |
| 06. | 4 | 16. | 3 | 26. | 3 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 5 |
| 08. | 2 | 18. | 1 | 28. | 3 |
| 09. | 4 | 19. | 1 | 29. | 3 |
| 10. | 2 | 20. | 3/4 | 30. | 1 |

○ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு ලකුණු 01 බැගින් /01 புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 01 × 30 = 30

- 31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடையெழுதும்போது பொருத்தமான சொல் / சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

31. (அ) வலுசக்தி விரயத்தினை குறைப்பதில் கரிசனை செலுத்துவது ................................. நிலைபேறு தன்மையாகும் அதேவேளை சமத்துவத்தை நோக்கிய கரிசனை ................................. நிலைபேறு தன்மை ஆகும்.

(ஆ) வணிகம் ஒன்று நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த சம்பளத்தினை வழங்குவது ................................. பொறுப்புக்கு உதாரணமாகும் அதேவேளை நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த சம்பளத்திலும் பார் அதிகமாகவே வழங்குவது வணிகத்தின் ................................. பொறுப்புக்கு உதாரணமாகு

31. (அ) சூழல், சமூக

(ஆ) சட்ட, ஒழுக்க (விழுமிய)

32. (அ) நாணயக் கொள்கையானது பண நிரம்பல் மற்றும் ................................. ஐயும் முகாமை செய் அதேவேளை இறைக் கொள்கையானது அரச செலவினங்கள் மற்றும் ................................. ஐ முகாமை செய்கிறது.

(ஆ) வணிகமொன்றின் மொத்த விற்பனை வருவாயின் மீது விதிக்கப்படுவது ................................. வரியாகும் அதேவேளை, வங்கியினால் தனிநபரின் வட்டி வருமானத்திற்கமைய கழிக்கப்படுவ ................................. வரி ஆகும்.

32. (அ) வட்டி வீதங்கள், அரச வருமானங்களும் / வரி மற்றும் வரியல்லாத வருமானங்களும்

(ஆ) விற்பனைப் புரள்வு, பிடித்து வைத்தல் All Wht, [illegible] Advance income tax

33. (அ) பங்குடைமை ஒப்பந்தமொன்றானது வாய்மொழி, ................................. அல்லது உட்கிடை உருவாக்கப்படக்கூடியதுடன் 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்திற்கமை பங்காளர்களுக்கிடையே ஒப்பந்தம் ஒன்று இல்லாதவிடத்து இலாபம் ................................. ப செய்யப்படும்.

(ஆ) ................................. வரையறுத்த கம்பனியானது பங்குகளை வெளியிட முடியாத அதேவே அதன் முதனிலை நோக்கம் ................................. உழைப்பதல்ல.

33. (அ) எழுத்து, சமமாக

(ஆ) உத்தரவாதத்தால், இலாபம் (பிணையாளர்)

34. (அ) வாடிக்கையாளர்களுக்கு பட்டியல் விலையிலும் பார்க்க குறைத்து பொருளை விற்பனை செய்யும்போது ............................... கழிவு வழங்கப்படும் அதேவேளை பணத்தினை முன்கூட்டியே செலுத்தும்போது கடன்பட்டோருக்கு வழங்கப்படுவது ............................... கழிவு ஆகும்.

(ஆ) முதலீட்டாளர் சார்பில் பிணைகளை வாங்குதல் மற்றும் விற்றலில் ஈடுபடும் நிறுவனமானது ............................... கம்பனி ஆகும் அதேவேளை அக்கம்பனியானது இலங்கை பிணைகள் ............................... ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

34. (அ) வியாபார, காசு /

(ஆ) பங்குத்தரகர் / தரகர், பரிமாற்று

35. (அ) பேரளவில் மேலங்கிகளை (shirts) உற்பத்தி செய்யும் உற்பத்திச் செயன்முறை ............................... உற்பத்திக்கு உதாரணமொன்றாகும் அதேவேளை வாடிக்கையாளரின் கட்டளைக்கு அமைவாக ஒரு மேலங்கியைத் தைக்கும் செயன்முறை ............................... உற்பத்திக்கு உதாரணம் ஆகும்.

(ஆ) கட்டுப்பாட்டு அட்டவணை நுட்பமுறை ............................... செயன்முறைக் கட்டுப்படுத்தலின்போது பயன்படுத்தப்படும் அதேவேளை உற்பத்திப்பொருளின் தரம் தொடர்பிலான பிரச்சினைகளை கலந்துரையாட வழமையாக நடைபெறும் குழுக் கூட்டம் தர ............................... இற்கு உதாரணமாகும்.

35. (அ) தொகுதி / இணைத்தல் (Assemply Line), வேலை / கட்டளை

(ஆ) புள்ளிவிபர, வட்டம்

36. (அ) கணினி உதவியுடனான வடிவமைப்பானது (CAD) உற்பத்திப்பொருளின் ............................... கட்டத்தின்போது பயன்படுத்தப்படும் அதேவேளை கணனி உதவியுடனான உற்பத்தியானது (CAM) உற்பத்திப்பொருளின் ............................... கட்டத்தின்போது பயன்படுத்தப்படும்.

(ஆ) உபகரணம் மற்றும் வேலைத்தள ஒழுங்கமைவிற்கு அமைவாக ஒழுங்குபடுத்துவது ............................... தளஅமைப்பு ஆகும் அதேவேளை உபகரணம் மற்றும் இயந்திரங்களை, உற்பத்தி நடைபெறும் இடத்திற்கு கொண்டுவருவது ............................... தள அமைப்பு ஆகும்.

36. (அ) வடிவமைத்தல், உற்பத்தி

(ஆ) உற்பத்திப்பொருள், நிலையான /

37. (அ) கம்பனியொன்று பல உற்பத்திப்பொருட்களுக்கு ஒரே பண்டக்குறியினை பயன்படுத்துவது ............................... பண்டக்குறி எனப்படுவதுடன் பல உற்பத்திப்பொருட்களுக்கு வெவ்வேறு பண்டக்குறிகளை பயன்படுத்துவது ............................... பண்டக்குறி என அழைக்கப்படும்.

(ஆ) சந்தை ஒன்றினை ஓரினக் குழுக்களுக்கு பிரித்து ஒதுக்குவது சந்தை ............................... ஆகும் அதேவேளை, கம்பனியினால் கைத்தொழிலின் மொத்த விற்பனையில் கைப்பற்றப்படும் குறித்த விகிதாசாரம் ..........All.......... சந்தை ஆகும்.

open

37. (அ) குடும்ப, பொருள்

(ஆ) துண்டாக்கல், சந்தைப்பங்கு

All

open

38. (அ) குத்தகைக் கால முடிவில் குத்தகைக்கு எடுத்தவர் குத்தகைச் சொத்தினை கொள்வனவு செய்வ தெரிவு .............................. குத்தகை ஆகும் அதேவேளை குத்தகைக் கால குத்தகைக்கு எடுத்தவர் குத்தகைச் சொத்தினை குத்தகைக்கு வழங்கியவருக்கு மீளத் கொடுப்பதற்கான தெரிவு .............................. குத்தகை ஆகும்.

(ஆ) கம்பனியொன்று கடன் மீதான வட்டியை செலுத்துவதற்கான ஆற்றலை அளவிட .............................. விகிதம் பயன்படுத்தப்படும் அதேவேளை வருமானத்தை உ கொள்வதற்கு சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படுவதனை அளவிட .............................. விகிதம் பயன்படுத்தப்படும்.

38. (அ) நிதி, செயற்பாட்டு

(ஆ) காப்பு, புரள்வு

39. (அ) ஊழியர்களின் தற்போதைய வேலை தொடர்பில் தேவையான திறன்களை விருத்தி செ .............................. ஊடாகவும் அதேவேளை அவர்களின் எதிர்கால தொழில் தொடர்பில் தேவையான புதிய திறன்களை விருத்தி செய்வது .............................. ஊ ஆகும்.

(ஆ) ஊழியர்களால் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக உருவாக்கப்படும் த தொழில் .............................. ஆகும் அதேவேளை, தொழில் தருனர் மற்றும் ெ பெறுனருக்கு இடையிலான பேச்சுவார்த்தைச் செயன்முறையானது கூட்டு .............................. என அழைக்கப்படும்.

39. (அ) பயிற்சி, அபிவிருத்தி

(ஆ) சங்கம், பேரம்பேசல்

40. (அ) வெளியீட்டுடன் மாற்றமடையாமல் இருக்கும் கிரயம் .............................. கிரய அழைக்கப்படுவதுடன் வெளியீட்டுடன் மாற்றமடைந்து செல்லும் கிரயம் .............................. கிரயம் என அழைக்கப்படும்.

(ஆ) திரட்டப்பட்ட சகல தரவுகளையும் ஒரே தடவையில் செயன்முறைப்படுத்துவது .............................. செயன்முறைப்படுத்தலாகும் அதேவேளை, தரவுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தி செயன்முறைப்படுத்துவது .............................. செயன்முறைப்படுத்தல் ஆகும்.

40. (அ) நிலையான, மாறும்

(ஆ) தொகுதி, அதேநேர

- 41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தரப்பட்ட வெற்றிடங்களில் எழுதுக.

**41.** முயற்சியாண்மை நாடொன்றிற்கு முக்கியமானது ஏன் என்பதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

41. (1) பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்கு
(2) பிரதேச வளங்களைப் பயன்படுத்துவதற்கு
(3) வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்வதற்கு
(4) அந்நியச் செலாவணியை உழைப்பதற்கு
(5) புத்தாக்கங்களை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பத்தை முன்னேற்றுவதற்கும்
(6) தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு
(7) சமூகக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு

42. பின்வரும் உதாரணங்களுக்கான சரியான மேம்படுத்தல் கலவையினை தருக.

| உதாரணங்கள் | மேம்படுத்தல் கலவை |
|---|---|
| (i) ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் (BOGOF) | (A) ______ |
| (ii) எதிர்கால வாடிக்கையாளருடனான தனிப்பட்ட சந்திப்பு | (B) ______ |
| (iii) கிரிக்கட் சுற்றுப்போட்டி ஒன்றுக்கு அனுசரணை வழங்குதல் | (C) ______ |
| (iv) தனிப்பயனாக்கப்பட்ட (Personalized) மின்னஞ்சல் பிரசாரம் (Campaign) | (D) ______ |

42. (A) விற்பனை மேம்படுத்தல்
(B) தனியாள் விற்பனை
(C) பொதுமக்கள் தொடர்பு
(D) நேர் சந்தைப்படுத்தல்

43. வணிகம் ஒன்றின் நிதிக்கூற்றுகளை பகுப்பாய்வு செய்வதனூடாக முகாமையாளர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்கள் நான்கினைக் குறிப்பிடுக.

43. (1) நோக்கங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை அறிந்து கொள்வதற்கு
(2) வணிகத்தின் வெற்றியை அளவிடுவதற்கு
(3) செயற்பாட்டு வினைத்திறனை ஒப்பிட்டுப் பாரத்து அபிவிருத்தி செய்வதற்கு
(4) எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளைக் கண்டறிவதற்கு
(5) இடரை முகாமை செய்வதற்கு
(6) போட்டி நலன்களை ஒப்பிடுவதற்கு
(7) நிதியை முகாமை செய்வதற்கு
(8) வளங்களை முகாமை செய்வதற்கு

**44.** இலங்கையில் காணப்படும் ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் நான்கினைப் பெயரிடுக.

44. (1) காப்புறுதிக் கம்பனி
(2) ஊழியர் சேமலாப நிதியம் (EPF)
(3) ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF)
(4) சேவை வழங்குனர்களின் பொறுப்பு நிதியம் / அரச பணி சேமலாப நிதியம்
(5) அங்கீகாரமளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் ~~நம்பிக்கை நிதியம்~~ சேமலாப நிதியம்

45. ஊழியர் செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் நா… குறிப்பிடுக.

45. (1) ஊழியர்கள் தமது ஆற்றல் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கு
(2) நிதி தொடர்பான நன்மைகளை ஊழியர்கள் பெற்றுக்கொள்வதற்கு
(3) எதிர்கால பதவியுயர்வுக்கான ஆற்றல் / தகைமையை பெற்றுக்கொள்வதற்கு
(4) தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொடுப்பதற்கு
(5) ஊழியர் தமது சேவையில் திருப்தி அடைந்துகொள்வதற்கு

46. கணினி அடிப்படையிலான தகவல் முறைமை (CBIS) ஒன்றின் பிரதான தொழிற்பாடுகள் நான்கினைக் கு…

46. (1) தரவுகளைச் சேகரித்தல்
(2) தரவுகளைச் செயன்முறைப்படுத்தல்
(3) தரவுகளைக் களஞ்சியப்படுத்தல்
(4) தகவல்களை வழங்குதல்
(5) தகவல்களுக்கேற்ப தீர்மானமெடுத்தல்
(6) தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்
(7) தரவு முறைமையின் செயற்றிறனை கட்டுப்படுத்தல்

47. இலங்கை மத்திய வங்கியின் முகவராண்மை தொழிற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

47. (1) அரசின் கடன் முகாமைத்துவம்
(2) அந்நிய செலாவணிக் கட்டுப்பாடு
(3) சிற்றளவிலான நிதியிடல் வேலைத் திட்டங்களுக்கு கிராமிய கடன் முன்மொழிவு முறைகள் தொடர்பில் தலைமை நிறுவனமாகத் தொழிற்படல்
(4) ஊழியர் சேமலாப நிதியத்தை முகாமை செய்தல்

48. கீழே தரப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய குறுஞ் சொற்களின் முழுப்பெயரை எழுதுக.

48. (1) AI – Artificial Intelligence (செயற்கை நுண்ணறிவு)
(2) WWW – World Wide Web (உலகளாவிய வலையமைப்பு)
(3) LAN – Local Area Network (உள்ளிட வலையமைப்பு)
(4) VOIP – Voice Over Internet Protocol (இணைய நடப்பொழுங்கு மூலமான குரல் /உரையாடல் வசதிகள்)

49. சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் நாணயக் கடிதத்துடன் தொடர்புடைய பிரதான தரப் நான்கினைப் பெயரிடுக.

49. (1) ஏற்றுமதியாளர்
(2) ஏற்றுமதியாளர் நாட்டு வங்கி
(3) இறக்குமதியாளர்
(4) இறக்குமதியாளர் நாட்டு வங்கி

50. கடன் வழங்கும் நிறுவனம் ஒன்று கடன் வழங்கத் தீர்மானம் எடுக்கும் போது வணிகத் திட்டம் ஒன் கருத்திற்கொள்ளும் பிரதான காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

50. (1) வணிகத்தின் கிரயம் / செயற்றிட்டக் கிரயம்
(2) சாத்திய / எதிர்கால இலாபத்தன்மை
(3) காசுப்பாய்ச்சல் முறைகள்
(4) கடனை மீளச் செலுத்தும் ஆற்றல்
(5) பிணை வழங்கல் தேவைப்பாடு
(6) வணிகத் தந்ரோபாயங்கள

[All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

**32 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

* ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. துரித உணவு விற்பனை நிலையத்தின் உடைமையாளரும் முகாமையாளருமான ஆனந்தி, நிகழ்நிலை முறையினூடாக கட்டளைகளை ஏற்று சுகாதாரமான சேதன உணவுகளை (organic foods) விற்பனை செய்கின்றார். எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதார ஸ்திரமற்றதன்மை, வெளிநாட்டு சங்கிலி வணிகங்களின் போட்டி மற்றும் பிளாத்திக்கு கொள்கலன்களைப் பயன்படுத்துவதற்கான சட்டக் கட்டுப்பாடுகள் போன்றவற்றின் காரணமாக சேதன உணவுகளின் விற்பனையின் அளவு குறைவடைந்தது. இதன் விளைவாக தனது ஊழியர்கள் சிலரை வேலையில் இருந்து தற்காலிகமாக நீக்க அவர் தீர்மானித்தார்.

   (i) (அ) ஆனந்தியின் வணிகமானது எந்த உற்பத்தித் துறைக்கு உரித்தானதாகும்? உமது விடைக்கான காரணம் ஒன்று தருக. (02 புள்ளிகள்)

   (ஆ) வணிகத்தின் உடைமையாளராகவும் முகாமையாளராகவும் ஆனந்தி இருப்பதன் அனுகூலங்கள் இரண்டினையும் பிரதிகூலங்கள் இரண்டினையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(i) (அ) **சேவைகள் துறை** **(01 புள்ளி)**

**காரணம்:** உணவுப்பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் விருந்தோம்பலில் ஈடுபடுவதனால் **(01 புள்ளி)**

(ஆ) **அனுகூலம்:**

1. இலகுவாக ஆரம்பிக்க முடிதல்
2. இலாபங்கள் முழுவதும் உரிமையாளருக்கே கிடைக்கப் பெறல்
3. சுதந்திரமாகத் தீர்மானமெடுக்க முடிதல்
4. சட்டங்களும் பிரமாணங்களும் குறைவாகக் காணப்படுதல்
5. வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பு
6. இரகசியம் பாதுகாக்கப்படல்
7. இலகுவாக நிறுவலாம் or கலைக்கலாம்.
8. முகாமை செய்தல் இலகுவானதாகும். **($^1/_2$ x 2 = 01 புள்ளி)**

**பிரதிகூலம்:**

1. அதிகளவு மூலதனத்தைப் பெற்றுக்கொள்வது கடினம்
2. உரிமையாளரே தீர்மானமெடுப்பதனால் தோல்வியடையலாம்
3. நட்டங்களைத் தனியாகப் பொறுப்பேற்க வேண்டியிருத்தல்
4. வியாபாரம் விரிவடையும்போது முகாமை செய்வது கடினமாகும்
5. உரிமையாளரின் வரையறையற்ற பொறுப்பு. **($^1/_2$ x 2 = 01 புள்ளி)**
6. தொடர் வாழ்வின்மை / சட்ட ஆளுமை இன்மை

(ii) (அ) ஆனந்தியினது வணிகத்தின் குணாம்சங்கள் இரண்டினைப் பெயரிடுக. (02 புள்ளி)
(ஆ) ஆனந்தியின் வணிகமானது பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய வழிகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளி)

(ii) (அ)

1. நிகழ்நிலை விற்பனை நடவடிக்கை காணப்படல்
2. ஆரோக்கியமான உணவு விற்பனை செய்யப்படுதல்
3. உரிமையாளரே முகாமையாளராக இருத்தல் (1 x 2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம்
2. வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் மூலம்
3. புத்தாக்கங்களை உருவாக்க உதவுவதன் மூலம்
4. அரசிற்கு வரி வருமானத்தை கிடைக்கச் செய்வதன் மூலம்
5. சூழல் நேயம் மூலம்
6. ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்கு உதவுவதன் மூலம்

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(iii) (அ) மேலே தரப்பட்ட சம்பவக்கற்கைக்கு அமைவாக, ஆனந்தியின் வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் பணிச் சூழல் விசைகள் இரண்டினையும் பேரண்டச் சூழல் விசைகள் இரண்டினையும் பெயரிடுக. (02 புள்ளி)
(ஆ) ஆனந்தியினது வணிகத்தினால் சமூகத்திற்கு நிறைவேற்றப்படக்கூடிய சமூகப் பொறுப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி)

(iii) (அ) **பணிச்சூழல்**

1. வழங்குனர்
2. வாடிக்கையாளர்
3. போட்டியாளர்

($^1/_2$ x 2 = 01 புள்ளி)

**பேரண்டச் சூழல்**

1. சட்டச் சூழல்
2. பொருளாதாரச் சூழல்
3. தொழினுட்பச் சூழல்

($^1/_2$ x 2 = 01 புள்ளி)

(ஆ)

1. வேலைவாய்ப்பிற்குப் பங்களிப்புச் செய்தல்
2. கழிவுப்பொருள் முகாமைத்துவம்
3. நேர் உற்பத்தி
4. சமூக நலன்புரிச் சேவை
5. சூழலை நேசிப்பவராகக் கருமமாற்றல் (1 x 2 = 02 புள்ளிகள்)

(iv) (அ) இலங்கையில் 2005 ஆம் ஆண்டின் உணவு (கட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரப்படுத்தல்) ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக உணவுப் பொதிகளில் குறிப்பிட வேண்டிய கட்டாயமான தகவல்கள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) துரித உணவுகளை விற்பனை செய்யும் வெளிநாட்டு அங்கீகார வணிகங்கள் ஆனந்தியின் உணவு வணிகத்தின் போட்டியாளர்களாகக் கருதப்படுவது ஏன் என்பதற்கான காரணங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ)

1. பொருளில் அடங்கியுள்ள உள்ளடக்கங்களின் விபரம் /
2. தொகுதி இலக்கம்
3. காலாவதியாகும் திகதி
4. உற்பத்தித் திகதி
5. மொத்த / நிகர நிறை
6. களஞ்சியப்படுத்தலுக்கான ஆலோசனை
7. உற்பத்தியாளர் பெயர், முகவரி
8. உற்பத்தி செய்த நாடு

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. வணிகத்திற்கு ஒத்ததன்மையான பொருளை உற்பத்திசெய்தல்
2. ஒத்த இலக்கு சந்தையில் சந்தைப் பங்கைக் கைப்பற்றல்
3. இலக்கு சந்தையின் ஒரு பகுதியில் நுழைதல்

(1x 2 = 02 புள்ளிகள்)

(v) (அ) இவ்வணிகத்தினது ஊழியர்கள் சிலரை தற்காலிகமாக சேவையிலிருந்து நீக்கியது, தொடர்ந்து சேவையாற்றும் ஊழியர்களின் மீது தாக்கம் செலுத்தும் வழிகளை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இழந்த விற்பனைகளை மீட்பது தொடர்பில் ஆனந்தி அமுல்படுத்தக்கூடிய தந்திரோபாயங்கள் இரண்டினைப் பரிந்துரை செய்க. (02 புள்ளிகள்)

(v) (அ)

1. ஊழியர்கள் ஊக்குமிழத்தல்
2. ஊழியர் அர்ப்பணிப்பு குறைவடையும்
3. செயற்பாடுகள் குறைவடைவதனால் வெளியீட்டினளவு குறைவடையும்
4. வேலையில் சலிப்புத்தன்மை ஏற்படல்
5. தொழில் பாதுகாப்பின்மை காணப்படல்
6. தற்போதிருக்கும் ஊழியர்களுக்கு மனவழுத்தம் ஏற்படல்
7. ஊழியர் புரள்வும் வரவின்மையும் அதிகரிக்கும்

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி
விளக்கத்திற்கு 01 புள்ளி)

(ஆ)

1. உயர்தரமான பொருட்களைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கான செயற்பாடுகளிலீடுபடுதல் (தரமான சேவை வழங்குதல்)
2. போட்டியாளரின் விலையைவிடக் குறைந்த விலையில் வழங்குதலும் உயர்வான சேவை வசதிகளை வழங்க மேம்படுத்தல் முறைகளைப் பயன்படுத்தல்
3. சூழல் நேயப் பொதியிடலுடன் விநியோகித்தல்
4. ஒழுக்க சீலரான நிபுணர்களை வேலைக்கு அமர்த்துதல்
5. வாடிக்கையாளருக்கு உயர்ந்த பெறுமதியை வழங்குவதற்காக சேவை வழங்கும் நிலையத்தையும் அதன் சூழலையும் ஆக்கபூர்வமாக அமைத்தல்
6. உணவுப் பட்டியலை (Menu card) மீள் ஆலோசனைக்கு உட்படுத்தல்

(1 x 2 = 02 புள்ளிகள்)

காந்தன் மற்றும் காசிம் ஆகியோரின் விவசாய வணிகத்தை பங்குடைமை வணிகமாக பதிவு செய்வது அவர்களது சட்ட ஆலோசகரால் ஆலோசனை வழங்கப்பட்டது. அவர்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை தொடர்பிலான கட்டளை ஒன்றினை அண்மையில் பெற்றுள்ளனர். இக்கட்டளையினை பூரணப்படுத்துவது தொடர்பில் அவர்களுக்கு ரூ 5 மில்லியன் மேலதிக முதலீடாகத் தேவைப்படுவதனால் அவர்கள் பின்வரும் மாற்றுவழிகளைக் கருதுகின்றனர்:

- புதிய பங்காளரைச் சேர்த்தல்.
- வரையறுத்த தனியார் கம்பனியாக உருவாக்குதல்.
- வங்கிக் கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல்.

(i) (அ) காந்தனும் காசிமும் தமது வணிகத்தை பங்குடைமை வணிகமாக உருவாக்குவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) காந்தனும் காசிமும் தமது வணிகத்தினை இலங்கையின் 1918 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க வியாபார பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பங்குடைமை வணிகமாகப் பதிவு செய்வதனூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(i) (அ)

1. இலகுவாக ஆரம்பிக்க முடிதல்
2. சுயமாகக் கலைக்க முடிதல்
3. அதிக மூலதனத்தை சேகரிக்க முடிதல்
4. பலரது திறன்களையும், திறமைகளையும் ஒன்றிணைக்கலாம்
5. பொறுப்புக்கள் பலரிடையே பகிரப்படும்
6. ஒன்றிணைந்த பொறுப்புக் காரணமாக ஊக்கமும் வினைத்திறனும் அதிகரிக்கும்.

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. வணிகத்தின் சட்டரீதியான தன்மையை (வணிக சட்டரீதியான உரிமையை) உறுதிப்படுத்தல்
2. வணிகத்திற்கு அங்கீகாரத்தை ஏற்படுத்துதல்
3. இலகுவாகக் கடன் பெறலாம்
4. வாடிக்கையாளருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தல்
5. ~~வணிகத்திற்கு அங்கீகாரம் கிடைக்க முடிதல்~~
6. சிக்கல்களை / பிணக்குகளைத் தவிர்க்க முடிதல்
7. இலகுவாகக் கம்பனியாக மாற்றம் செய்ய முடிதல் (1 x 2 = 02 புள்ளிகள்)

(ii) (அ) விவசாய உற்பத்திகளின் உற்பத்திக் கிரயம் அதிகரித்துச் செல்லுமாயின் அது வணிகர்களிலும் நுகர்வோரிலும் எவ்வாறு தாக்கம் செலுத்தும்? (02 புள்ளிகள்)

(ஆ) பங்குடைமை வணிகம் ஒன்றுக்கு பங்குடைமை உடன்படிக்கை காணப்படாதவிடத்து புதிய பங்காளர் ஒருவரை சேர்த்துக் கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய பிரமாண நியதியினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ)

| வணிகர்களுக்கு | நுகர்வோருக்கு |
|---|---|
| 1. உள்ளீட்டுக் கிரயம் அதிகரிக்கும் | 1. விலைகள் அதிகரிக்கும் |
| 2. விற்பனை குறைவடையும் | 2. வாழ்க்கைத்தரம் குறைவடையும் |
| 3. இலாபம் குறைவடையும் | 3. மாற்றீட்டுப் பொருட்களைக் கண்டறிதல் |
| ($^1/_2$ x 2= 01 புள்ளி) | ($^1/_2$ x 2= 01 புள்ளி) |

(ஆ)

- எல்லாப் பங்காளருடைய சம்மதத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் (இலாபப் பகிர்வு, மூலதனமிடல், பொறுப்பு தொடர்பான) தகவல்களை கலந்துரையாடித் தீர்மானித்தல். (02 புள்ளிகள்)

(iii) (அ) காந்தனும் காசிமும் தேயிலை தொடர்பில் பெறுமதி சேர்க்கையினை மேற்கொள்ளக் கூடிய வழிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) காந்தனும் காசிமும் தமது விவசாய உற்பத்திப்பொருட்களை சர்வதேச சந்தையில் மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடமிருந்து (EDB) பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் இரண்டினை எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) (அ)

1. பொதிசெய்யப்பட்ட தேயிலை விநியோகத்தில் ஈடுபடல்
2. உற்பத்திப்பொருளின் தரத்தினை அதிகரித்தல் (சேதன தேயிலை உற்பத்தி)
3. பச்சைத் தேயிலை உற்பத்திகள் (Green Tea)
4. சந்தையில் புத்தாக்கங்களை உருவாக்குதல் (Tea toffees, Tea tablets)
5. விசேட வகையான தேயிலைகளை உற்பத்தி செய்தல்
   உதா.: வாசனையூட்டல், சுவையூட்டல்

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. சந்தை தொடர்பான கண்காட்சிகளை நடாத்த அனுசரணை வழங்குதல்
2. இறக்குமதி விநியோக வசதிகளை வழங்குதல்
3. ஆலோசனை சேவை வழங்குதல்
4. புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடிக் கொடுத்தல்
5. தொழினுட்ப சேவைகளை வழங்குதல்

([illegible] x 2 = 02 புள்ளிகள்)

3. (i) (அ) 'சமூக முயற்சியாண்மை' என்றால் என்ன? (02 புள்ளிகள்)
(ஆ) சமூக முயற்சியாண்மையின் சவால்கள் நான்கினைக் குறிப்பிடுக (02 புள்ளிகள்)

3 (i) (அ) சமூகத்துக்கு சேவை செய்யும் எண்ணத்தில் சமூக, சூழல், கலாச்சார ரீதியான பிரச்சனைகளுக்கான தீர்வுகளில் ஈடுபடுவதற்காக புத்தாக்கங்களில் ஈடுபடுதல், மனத்திருப்தி, வரவேற்பு, புகழ், பிரதியுபகாரம் போன்ற நலன்கள் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (02 புள்ளிகள்)

(ஆ)
1. திறன்கொண்ட ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளவதிலுள்ள சிக்கல்கள்
2. நிதி மற்றும் சமூக இலக்குகளுக்கிடையில் சமனற்ற தன்மை காணப்படல்
3. வணிகத் திட்டங்களுக்கு நிதியினைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள் (முதலீடு)
4. வணிகத்தை விரிவாக்குவதிலுள்ள இடர்கள்
5. பாரம்பரிய வணிகங்களுடனான போட்டி

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(ii) (அ) முயற்சியாண்மையாளருக்கும் வணிகர்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினை விபரிக்குக. (02 புள்ளிகள்)
(ஆ) வாடிக்கையாளர் ஒருவர் எண்ணியல் (digital) கொடுப்பனவு முறையினூடாக பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ)

| முயற்சியாண்மையாளருக்கு | வணிகர்களுக்கு |
|---|---|
| • தனது கருத்து அல்லது புதிய எண்ணக்கருவிற்கேற்ப வணிகத்தை ஆரம்பிப்பார் | • நடைமுறையில் காணப்படும் கருத்து அல்லது எண்ணக்கருவுக்கமைய வணிகத்தை ஆரம்பிப்பார் |
| • முயற்சியின் வணிகத்திற்கு அவரே போட்டியாளர் | • வணிகத்திற்கு பல போட்டியாளர் காணப்படுவர் |
| • புதிய வணிக வாய்ப்புக்கள் தொடர்பில் ஆயத்தமாவார் | • தமது வணிகக் கருமம் தொடர்பில் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்துவார் |
| • புத்தாக்கம் புனைபவர் | • பாரம்பரியத்தைப் பின்பற்றுவார் |
| • இடர்களுக்கு முகங்கொடுப்பார் | • பாதுகாப்பான முறையில் கருமமாற்றுவார் |
| • பிரச்சினைகள் உருவாகும்போது சிறப்பாக முகங்கொடுப்பார் | • பிரச்சினைகள் ஏற்படும்போது உற்சாகமிழப்பார் |

(1 x 2 = 02 புள்ளிகள்)

(ஆ)
1. வேகமான
2. கிரயம் குறைவு
3. சர்வதேச கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்த முடிதல்
4. பல்வேறுப்பட்ட பயன்களைப் பெற (வெகுமதிகளும் கழிவுகளும்)
5. 7/24 மணிநேர சேவை
6. அறிக்கைகளைப் பெறுவது இலகுவானது
7. நெகிழ்ச்சியான கொடுப்பனவு
8. பௌதீகத் தொடர்பின்றிக் காணப்படுவதனால் பணப் பாதுகாப்பு கிடைத்தல்.

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(iii) (அ) நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு (MSM) வணிகத்தில் இருந்து பேரளவு வணிகம் வேறுபடும் வழிகள் நான்கினை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ)

1. வரையறுக்கப்பட்ட மூலதன வழிகள் காணப்படல்
2. குறைந்தளவு தொழினுட்பப் பயன்பாடு
3. சட்ட ரீதியான செயற்பாடுகள் குறைவு
4. தீர்மானம் எடுக்கும் முறைகள் குறைவு
5. ஊழியர் தொடர்பு அதிகரித்தல்
6. சந்தையளவு குறைவடைதல்
7. ஒப்பீட்டளவில் ஊழியர் குறைவடைதல்
8. குறைந்தளவு நிதித் தொடர்புகள் ஏற்படல்

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. சந்தை தொடர்பான பிரச்சினை
2. தொழினுட்ப ரீதியான பிரச்சினை
3. நிதி தொடர்பான பிரச்சினை
4. ஊழியர் தொடர்பான பிரச்சினை
5. உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பிரச்சினை
6. குடும்ப முரண்பாடுகள்
7. முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினை

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(iv) (அ) 'அடமானக் கடனுக்கும்' 'வங்கி மேலதிகப் பற்றுக்கும்' இடையிலான வேறுபாட்டை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதனால் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) **அடமானக்கடன்:**

நிறுவனம் / தனிநபர்கள், சொத்துக்கள் / ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக அவற்றினைப் பிணையாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்றதும் வங்கிமேலதிகப் பற்றுடன் ஒப்பிடும் போது குறைந்த வட்டி வீதமுடைய நீண்டகாலக் கடன்.

**வங்கி மேலதிகப்பற்று:**

வணிகவங்கி நடைமுறைக் கணக்கிலுள்ள மீதியை விடக் கூடுதலாக குறிப்பிட்டளவு வரையிலான காசோலையை வழங்குவதற்கு, குறுகிய காலத்திற்கு வணிக வங்கியால் வழங்கப்படும் அனுமதி.

(பூரண விடைக்கு 02 புள்ளிகள்)

| அடமானக் கடன் | வங்கிமேலதிகப் பற்று |
|---|---|
| 1. நடைமுறைக் கணக்கு அவசியமில்லை | நடைமுறைக் கணக்கு அவசியம் |
| 2. நீண்ட காலம் | குறுங்காலம் |
| 3. அனைத்து நிதி நிறுவனங்களிலும் | வணிக வங்கிகளில் மட்டும் |
| 4. குறைந்த வட்டி | ஒப்பீட்டளவில் அதிக வட்டி |
| 5. முழுக் கடனுக்கும் வட்டி செலுத்த வேண்டும் | பயன்படுத்தும் அளவுக்கு மட்டும் வட்டி செலுத்த வேண்டும் |
| 6. கொள்வனவு செய்யும் சொத்துக்களையும் ஆதனங்களையும் அடமானம் வைத்தல். | பிணை கட்டாயம் இல்லை |

(இரு வேறுபாடுகளை விளக்கியிருப்பின் 02 புள்ளிகள்)

(ii) (அ) வணிக நிறுவனம் ஒன்றுக்கு சமூக ஊடகங்களின் மூலம் கிடைக்கப்பெறும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் சமிக்ஞைகள் மற்றும் குறியீடுகளின் பிரதிகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ii) (அ)

1. பண்டக்குறியை பிரபல்யப்படுத்த
2. அதிகமான வாடிக்கையாளர்களைத் தொடர்புக்கொள்ள முடியும்
3. கிரயம் குறைவடையும்
4. சந்தையை விரிவாக்க முடியும்
5. சந்தை ஆய்வுக்கு உதவுதல்
6. ஊழியர்களைக் கவர்ந்து கொள்ள உதவுதல்
7. புதிய உற்பத்திகளை அறிமுகம் செய்தல்
8. இலக்கு வாடிக்கையாளரை அணுகுதல்

($^1/_2$ x 4 = 02 புள்ளிக

(ஆ)

1. பார்வைப் பிரச்சினை குறைபாடுகளுடைய பிரிவினர்களுடன் தகவல்க பரிமாறும்போது பிரச்சினைகள் உருவாகுதல்
2. சமிஞ்ஞை மற்றும் குறியீடுகள் திரிபுபடுவதன் காரணமாகத் தகவல்கை தொடர்பாடல் செய்வதில் தடைகள் ஏற்படல்
3. சில சமிஞ்ஞை மற்றும் குறியீடுகளை விளங்கிக் கொள்வது சிரமம்
4. சமிஞ்ஞைகள், குறியீடுகளை விளங்கிக் கொள்ள முன்னறிவு அவசியம்

($^1/_2$ x 4 = 02 புள்ளிக

(iii) (அ) 'சுதந்திர வர்த்தகம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளி

(ஆ) 'பல்மாதிரிப் (multi-modal) போக்குவரத்து' எனும் சொற்பதத்தினை உதாரணம் ஒன்றினூடாக விளக்குக. (02 புள்ள

(iii) (அ) எந்தவித தடைகளும் இன்றிப் பல்வேறு பிரிவினர்களும் சுதந்திரமாகப் பொரு இறக்குமதி, ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்படல்.

(02 புள்ளிக

(ஆ) போக்குவரத்து முறைகள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றைத் தொடர்புபடுத்தி ஒ ஒப்பந்ததாரரின் கீழ் இடம் நகர்த்தும் முறை.

(02 புள்ளிக

(iv) (அ) முகவர் மற்றும் விநியோகத்தர் ஆகியோர்களுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) தீர்வை வரித் தடைகள் (TB) எவ்வாறு தீர்வை வரியற்ற தடைகளிலிருந்து (NTB) வேறுபடுகின்றது என்பதை ஒரு உதாரணம் மூலம் விளக்குக. (02 புள்ளி

(iv) (அ)

| முகவர் | விநியோகத்தர் |
|---|---|
| • முதல்வர் சார்பாகத் தனது அதிகாரத்தின் அடிப்படையில் வாடிக்கையாளருக்குப் பொருட்களை விநியோகிப்பர் | • பொருட்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளருக்கு விற்பனைக்காகவோ அல்லது வாடிக்கையாளருக்கு விநியோகிப்பர் |
| • தரகினைப் பெற்றுக்கொள்வர் | • இலாபத்தினைப் பெற்றுக்கொள்வர் |
| • வணிகத்தின் இடரை ஏற்றுக்கொள்ள மாட்டார் | • வணிகத்தின் இடரை எதிர்கொள்வர் |

(1 x 2 = 02 புள்ளிக

(ஆ) 5. அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்ட வட்டி வருமானம்.
1. உயர்வான திரவத்தன்மை
2. இரண்டாம் தரச் சந்தையில் விற்பனை செய்யலாம்
3. அரச உத்தரவாதம் காணப்படல்
4. ... (1 x 2 = 02 புள்ளிகள்)

(v) (அ) காசோலை அடியிதழ்களில் பதிவுகளைப் பேணுவதன் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'நுண் நிதியிடல்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(v) (அ)

1. காசோலை தொடர்பிலான தகவல்களைப் பெறலாம் (பெறுபவர், தொகை, திகதி)
2. கொடுப்பனவுக்கான ஆதாரமாகக் அமைதல்,
3. வங்கி இணக்கக் கூற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தகவல்களைப் பெற முடியும்.
4. வரி மற்றும் சட்ட ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்தல்
5. மோசடி, தவறுகளைக் குறைக்க பயன்படுத்தலாம்

(1 x 2 = 02 புள்ளிகள்)

(ஆ) பாரம்பரிய வங்கிச் சேவையை பெற்றுக்கொள்ள முடியாத சிறிய வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்குப் பெறக்கூடிய நிதிச் சேவையாகும். (02 புள்ளிகள்)

4. (i) (அ) ஆயுட் காப்புறுதியின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் இருவரைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஏற்றுமதிக் கடன் காப்புறுதியினூடாக ஏற்றுமதியாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

4 (i) (அ)

- காப்புறுதி செய்பவர்
- பெயர் குறிப்பிடப்பட்ட நியமனத்தாரர் / பின்னுரித்தாளர் (1 x 2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. வணிக, வணிகமற்ற இடர் தொடர்பாகப் பொருட்கள், சேவைகளை ஏற்றுமதி செய்பவர்களுக்கு பணம் கிடைக்காமை அல்லது தாமதமாதல் போன்றவற்றுக்கு
2. பொருட்களைக் கப்பலேற்ற முன் அல்லது கப்பலேற்றிய பின் ஏற்றுமதி நிதி வசதி கிடைக்குமாறு வங்கி அல்லது நிதி நிறுவனங்களுக்கு நட்டஈடு கிடைக்கச் செய்தல்
3. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் கடன் தகவல்களைப் பெறல்

(1 x 2 = 02 புள்ளிகள்)

## பகுதி II

5. அமானி, மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி விளையாட்டுப் பொரு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினை ஸ்தாபித்ததுடன் தன உற்பத்தித் தளஅமைப்பி பயன்படுத்தினார். பல்வகைப்படுத்தப்பட்ட ஊழிய ஊக்குவித்தல் முறைகள் அவரால் பிரயோகிக்கப்ப தீர்மானம் மேற்கொள்வதில் ஊழியர்களின் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், உ செயன்முறையில் பிரச்சினைகள் நிகழ்வதற்கு முன்பாகவே திருத்தியமைக்கும் முறை அவரால் பின்பற்ற தன்னம்பிக்கை, கைத்தொழிலார் விசேடத்துவம் மற்றும் ஊழிய ஒத்துழைப்பு என்பன அவ முகாமைத்துவத்தின் குணாம்சங்கள் ஆகும்.

(i) (அ) அமானியிடம் காணப்படும் முகாமைசார் திறன்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 பு

(ஆ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கைக்கு அமைவாக நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டு அமானியின் தலைமைத்துவப் பாங்கினைப் பெயரிடுவதுடன், உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (02 பு

## பகுதி II

5 (i) (அ)

1. எண்ணக்கருவாக்கத்திறன்
2. மானிடத்திறன் / ஆளிடைத்தொடர்பு
3. தொழினுட்பத்திறன்

(ஏதாவது இரண்டுக்கு 02 புள்ளிக

(ஆ) ஊழியர் சார் தலைமைத்துவம்

(01 புள்ளி)

1. தீர்மானமெடுத்தலில் ஊழியரின் பல்வேறு பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்
2. வேறுப்பட்ட ஊக்குவிப்புக்களை பயன்படுத்தல்

(01 புள்ளி)

(ii) (அ) உற்பத்திச் செயன்முறையில் அமானி பயன்படுத்தும் கட்டுப்பாட்டு நுட்பத்தினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) குழந்தைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் விளையாட்டுப் பொருட்களில் தரத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உள்ளடக்க வேண்டிய மூலக்கூறுகள் இரண்டினை விபரிக்குக. (02 புள்ளி

(iv)

(ii) (அ) முன்னோக்கிய கட்டுப்பாடு (Feed-forward control)

(ஆ) (02 புள்ளிகள்)

1. நச்சுத்தன்மையின்மை, தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனத் தன்ம உள்ளடங்காமை
2. நியமத்திற்கு அமைவாக விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய் (உதா:- பாதுகாப்பு, நீண்டகாலப் பாவனை)
3. குழந்தைப் பருவ (உடல், உள) வளர்ச்சிக்கேற்ப அமைத்தல்
4. குழந்தைகளின் வயதிற்கேற்ப உற்பத்தி செய்தல்
5. சரியான தொழிற்பாடு காணப்படல் (குழந்தையின் விருப்பத்திற்கேற்ப)

(குறிப்பிட $^1/_2 \times 2 = 1$ விளக்கத்திற்கு $^1/_2 \times 2 = 1$)

~~(பூரண விடைக்கு 02 புள்ளிகள்)~~

(iii) அமானியினால் பிரயோகிக்கக்கூடிய நிதிசார் ஊக்குவிப்பு முறைகள் இரண்டினையும் நிதிசாரா ஊக்குவிப்பு முறைகள் இரண்டினையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) (அ) நிதிசார்:

1. ஊதியம்
2. உபகாரப் பணம்
3. மேலதிகப் படிகள் (போக்குவரத்து இருப்பிட வசதிகள்)
4. நிறுவன உற்பத்தி பொருட்களை சலுகை விலையில் வழங்குதல்
5. கடன் வசதிகள் வழங்குதல்

(1 x 2 = 02 புள்ளிகள்)

நிதிசாரா:

1. ஊழியருக்குப் பயிற்சி வழங்கல்
2. பதவியுயர்வு வழங்கல்
3. தொழிற் பாதுகாப்பு ஏற்படுத்தல்
4. பொருத்தமான வேல்லச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தலும் புதிய உபகரணம் வழங்கலும்
5. வீடு, பொழுது போக்கு போன்ற பிற நலன்கள்
6. ஊழியர் செயற்றிறன்களை பாராட்டுதல்
7. பரிசு வழங்கல்
8. ஊழியர்களை வலுப்படுத்துதல்

(1 x 2 = 02 புள்ளிகள்)

(iv) (அ) இயந்திரங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தொழிற்சாலையில் பயன்படுத்தக்கூடிய முறைகள் இரண்டினை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தியில் மீள்சுழற்சிக்குள்ளான மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதனால் அமானி பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினை விளக்குக (02 புள்ளிகள்)

(iv) (அ)

1. முன்னேற்றகரமான தொழினுட்ப உபகரணங்களுடன் கூடிய இயந்திரங்களைப் பயன்படுத்துதல்
2. பழுதடையாத இயந்திரங்களைப் பயன்படுத்துதல்
3. ஒழுங்கான முறையில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல்

(1x 2 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. கிரயத்தைக் குறைத்தல்
2. இலாபத்தை அதிகரித்தல்
3. காபன் அளவு குறைவடைதல்
4. சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் தன்மை அதிகரித்தல் (சமூகப் பொறுப்பு ஏற்படல்)
5. புதிய உற்பத்திப்பொருட்களை அறிமுகப்படுத்தல்
6. அரச அனுசரணை கிடைத்தல்
7. வீரயம் குறைவடைதல்

(குறிப்பிட்டு விளக்க 02 புள்ளிகள்)

(ஆ) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீது விதிக்கும் வரி தீர்வை வரியாகும். உ-தா: இறக்குமதித் தீர்வை

மேலும், சர்வதேச வியாபாரத்தைக் கட்டுப்படுத்தவும் மற்றும் ஏனைய நிதிசாராத கட்டுப்படுத்தல்களை மேற்கொள்வதும் தீர்வையற்ற தடைகளாகும். உ-தா: கோட்டா முறைமை.

**(விளக்கத்திற்கு 01 புள்ளி உதாரணத்திற்கு 01 புள்ளி)**

(v) (அ) உற்பத்தியாளருக்கு மொத்த வியாபார முகவர்களால் ஏற்படும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இணைய முறையிலான சில்லறை வியாபாரத்தினால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் நான்கினை விளக்குக. (02 புள்ளிகள்)

(v) (அ)

1. உற்பத்தியாளர் உற்பத்திப்பொருட்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள
2. சந்தை தொடர்பான தகவல்களை வழங்க
3. உற்பத்தியாளர்களுக்குப் பல்வேறு சேவைகளை வழங்க (நிதி வசதி, மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள)
4. உற்பத்தியாளர்களின் அபாயங்களை இழிவுபடுத்த
5. விற்பனை, விநியோகம் இலகுவாக்க
6. உற்பத்தியாளரின் இடரைக் குறைக்க
7. பல்வேறு இடங்களில் களஞ்சியசாலைகள் காணப்படுவதால் காட்சிப்படுத்தலை இலகுவாக்க

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. பொருட்களின் கொள்வனவு விற்பனையினை இலகுவாக்கல்
2. களஞ்சியப்படுத்தல் கிரயம் குறைவடைதல்
3. அதிக வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல்
4. 24 மணிநேரமும் விற்பனை செய்ய முடிதல்
5. வாடகைக் கிரயம் குறைவடைதல்
6. நிதி இடர் குறைவு
7. வாடிக்கையாளருடன் தொடர்பினை மேற்கொள்ள முடிதல்

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

6. வரையறுத்த ABC மோட்டார் வாகன (தனியார்) கம்பனியானது உயர் சமூக அந்தஸ்துடைய செல்வந்தர்களை இலக்காகக் கொண்டு ஆடம்பர மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. இந்நிறுவனமானது JIT இருப்பு கட்டுப்பாட்டு முறையைப் பயன்படுத்துவதுடன் உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் காணப்படும் உற்பத்திப்பொருட்களுக்கான சந்தை ஆராய்ச்சியினையும் மேற்கொண்டது. கம்பனியின் பிரதான மேம்படுத்தல் ஊடகங்களாக முகநூல் (Facebook), வலையொளி (Youtube), படவரி (Instagram), ரிக்ரொக் (Tiktok) என்பன பயன்படுத்தப்பட்டது. கம்பனியானது மோட்டார் வாகனம் ஒன்றினை ரூபா 10 000 000 இற்கு விற்பனை செய்யும் அதேவேளை மாறும் கிரயமாக ரூ 3 500 000 இனையும் நிலையான கிரயமாக ரூ 65 000 000 இனையும் கொண்டிருக்கின்றது.

(i) (அ) 'JIT முறை' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு தொடர்பில் JIT முறையினைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டினை விபரிக்குக. (02 புள்ளிகள்)

6 (i) (அ) உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களைத் தேவையான நேரத்தில் சரியான அளவுகளில் உற்பத்திச் செயன்முறைகளுக்கு சேகரித்தலும் முடிவுப்பொருட்களை உடனேயே சந்தைக்கு முன்வைத்தல் **(02 புள்ளிகள்)**

(ஆ)

1. கிரயம் குறைவடைவதனால் இலாபம் அதிகரிக்கும்
2. வழங்கல் சங்கிலி முகாமைத்துவக் குழு வினைத்திறனாக தொழிற்படுதல்
3. களஞ்சியக் கிரயம் குறைத்தல்
4. இருப்பு கிரயம் குறைவடைதல் காரணமாக தொழிற்படு மூலதனத்தில் முன்னேற்றம் காணப்படுதல்
5. வெளியீட்டினளவு அதிகரித்தல்
6. கேள்விக்கேற்ப உற்பத்தி வழங்கல்
7. காசு பாய்ச்சல் அதிகரித்தல்

**(1 x 2 = 02 புள்ளிகள்)**

(ii) (அ) 'இலக்குச் சந்தை' என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த கம்பனியானது சந்தை ஆராய்ச்சியினை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) முழுமையான சந்தையில் இருக்கின்ற பல்வேறு பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களில் ஒத்த பண்பு கொண்டவர்களை இனங்கண்டு அவர்களில் நிறுவனத்திற்கு மிகவும் ஈர்ப்புத் தன்மையுடனும் இலாபத் தன்மையாகவும் சேவை செய்யக் கூடிய சந்தைப் பங்கு இலக்குச் சந்தையாகும்.

**(02 புள்ளிகள்)**

(ஆ) தற்போதைய சந்தையில் தனது சொந்த உற்பத்தியின் வெற்றியை அறிந்துக் கொள்ளவும் எவ்வாறு வெற்றியடைய செய்வது என்பதுடன் போட்டியாளர்களுடன் ஒப்பீடு செய்து சந்தைப் பங்கு, உற்பத்தி அபிவிருத்தி போன்றவற்றை விளங்கிக் கொள்ளல்.

**(02 புள்ளிகள்)**

(iii) (அ) மேற்குறித்த கம்பனியினால் சந்தையை துண்டமாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய அடிப்படையினைப் பெயரிடுவதுடன் உமது விடைக்கான காரணம் ஒன்றினைக் குறிப்பிடுக. (02

(ஆ) சந்தைத் துண்டமாக்கலின் ஊடாக கம்பனி பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02

(iii) (அ) உளவியல் ரீதியானது (01 பு

காரணம் – உயர் சமூக அந்தஸ்து நிலையிலுள்ள வாடிக்கையாளரை மையமாகக் கொண் (01 பு

(ஆ)

1. முழுமையான சந்தையினைப் பகுப்பாய்விற்கு உட்படுத்துவதனால் சந் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்
2. பொருத்தமான சந்தர்ப்பங்களை இனங்காணல்
3. நிறுவனத்திடம் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாக பயனுறுதியாகவும் பயன்படுத்த முடிதல்
4. சந்தையிடர்களை இழிவுபடுத்த முடிதல்
5. சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை மிகச் சிறப்பாக மேற்கோள்ளல்

($^1/_2$ x 4 = 02 புள்ளிக

(iv) (அ) முகநூல், வலைபொளி, படவரி மற்றும் ரிக்ரொக் என்பவை குறித்து நிற்கும் சந்தை மேம்படுத்தல் முறையினைப் பெயரிடுக. (02 புள்

(ஆ) உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் அவதானிக்கக்கூடிய குணாம்சங்கள் இரண்டினைத் தருக. (02 புள்

(iv) (அ) சமூக ஊடக முறைகள் (02 புள்ளிகள்)

(ஆ)

1. விற்பனை அதிகரித்தல்
2. இலாப எல்லை அதிகரித்தல் / உயர் இலாப எல்லையை பேணுதல் / ...
3. போட்டி அதிகரித்தல்
4. விநியோகம் விரிவடைதல்
5. வாடிக்கையாளர் அதிகரித்தல்
6. சந்தை / புதிய சந்தை விரிவடைதல்
7. சந்தைப்படுத்தல் கிரயம் அதிகரித்தல்

(1 x 2 = 02 புள்ளிக

(v) (அ) 'கலத் தளஅமைப்பு' என்றால் என்ன? (02 பு
(ஆ) கலத் தளஅமைப்பின் அனுகூலம் ஒன்றினையும் பிரதிகூலம் ஒன்றினையும் குறிப்பிடுக. (02 பு

(v) (அ) உற்பத்திச் செயன்முறைகளின்போது ஒன்றுக்கொன்று சமமான இயந்திரங்களை தனித்தனியாக சிறு அலகுகளில் பொருத்தி உற்பத்தி நடவடிக்கைகள் பாய்ந் செல்லும் முறையில் இடம்பெறுவதற்கான தள அமைப்பாகும்.

(விளக்கமான விடைக்கு 02 புள்ளிகள்

(ஆ) **அனுகூலம்:**

1. மூலப்பொருட்களைக் கையாளும் கிரயத்தைக் குறைத்தல்
2. முதன்மைக்காலம் குறைவடைதல்
3. தொடர்பாடல் இலகு
4. குறைவேலை குறைவடைதன் மூலம் விரைவில் வேலையைப் பூரணப்படு முடிதல்
5. உற்பத்திப்பொருட்களின் தரம் உயர்வடைதல்
6. உற்பத்தித்திறன் அதிகரித்தல்
7. உற்பத்திக் கால அட்டவணைக்கு ஏற்ப வேலையை மேற்கொள்ளல்
8. இயந்திரம், ஊழியர் செயற்படாமல் இருக்கும் நேரம் குறைவடைதல்

(1 x 1 = 01 புள்

**பிரதிகூலம்:**

1. ஆரம்பக் கிரயம் அதிகம்
2. பல்வேறு திறனுடைய ஊழியர் தேவை
3. ஊழியர் மனஅழுத்தம் அதிகம்
4. உற்பத்தி நடவடிக்கைகளில் இடையூறுகள்

(1 x 1 = 01 புள்

(ii) (அ) வணிகம் ஒன்று காசுப் பாதீட்டினைத் தயாரிப்பதனால் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் 'வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச்சந்தை' என்பதனால் கருதப்படுவது யாது? (02

(ii) (அ)

1. எதிர்காலத்தில் காசு மிகையொன்று ஏற்படுமாயின் அதனை முற்கூட்டி அறிந்துகொள்ள முடியுமாகையினால் சிறப்பாக முதலீடு செய்ய முடியும்
2. எதிர்காலத்தில் காசு பற்றாக்குறை ஏற்படுமாயின் அதனை முற்கூட்டி அறிந்து அதற்கும் முகங்கொடுக்க ஆயத்தமாகுதல்
3. உண்மையான காசுச் செயற்பாட்டுடன் ஒப்பிடுவதன் மூலம் காசு தொடர் திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் இலகுவாகும்
4. வணிகக் கடன்களை பெற்றுக் கொள்ளும்போது எதிர்கால நிதி நிலைமை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்

(1 x 4 = 02 புள்ளி

(ஆ) வணிக வங்கிகளுக்கிடையில் குறுங்காலக் கடனுக்கான கேள்வி மற்றும் வழங்கல் இடம்பெறும் சந்தையைக் குறிக்கின்றது. (02 புள்ளி

(iii) (அ) கம்பனி ஒன்றில் மிகை ஊழியர் ஏற்படுத்தும் தாக்கத்தினை விபரிக்குக. (02

(ஆ) ஊழிய மனத்தாங்கலை இனங்காண்பதற்கு நிறுவனம் ஒன்று பயன்படுத்தக்கூடிய முறைகள் இரண்டினைத் தருக. (02

(iii) (அ)

1. கிரயம் அதிகரித்தல்
2. ஊழியர்களின் வீணான நேரம் அதிகரித்தல்
3. ஊழியர் ஊக்கமிழத்தல்
4. மொத்த உற்பத்தி குறைவடைதல் / ஊழியர் உற்பத்தித்திறன் குறைவடை
5. நிதிப்பிரச்சனை ஏற்படல்
6. ஊழியர் புரள்வு அதிகரித்தல் / வரவின்மை அதிகரித்தல்

(மேற்குறிப்பிட்ட 2 காரணங்களை உள்ளடக்கி விளக்க 02 புள்ளி

(ஆ)

1. விலகும் போதான நேர்முகக் கலந்துரையாடல் (Exit Interview)
2. ஆலோசனைப் பெட்டி (Suggestion Box)
3. ஊழியர் மனத்தாங்கல் அளவையாய்வு (Grievance Survey)
4. திறந்த வாயிற் கொள்கை (Open-Door Policy)
5. அவதானிப்பு முறை.
6. மனத்தாங்கல்களை கேட்டறியும் குழு / குறைகேள் குழு
7. குறைகேள் அதிகாரி நியமனம்.

(1 x 2 = 02 புள்ளி

iv) (அ) ஊழியர்களுக்கு எதிராக தொழில்தருனரால் எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் (ETF) அங்கத்தவர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

(அ)

1. வாய்மொழி மூலம் எச்சரித்தல்
2. எழுத்து மூலம் எச்சரித்தல்
3. தண்டம் விதித்தல் / நட்டத்தை அறவிடல்
4. தற்காலிகமாக வேலை இடைநிறுத்துதல்
5. வேலையிலிருந்து இடமாற்றல்
6. சம்பள அதிகரிப்பை நிறுத்தி வைத்தல் / தாமதப்படுத்தல்
7. பதவியிறக்கம் செய்தல்
8. சேவையிலிருந்து நீக்குதல்

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. இறப்பின்பேரில் நன்மைகளைப் பெறல்
2. கடன்களைப் பெறல்
3. தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல்
4. கண் வில்லைக்கான செலவுகளை மீளப்பெறல்
5. நிரந்தர இயலாமைக்கான காப்புறுதி வசதிகள்
6. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான தொழிற் பயிற்சித் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கல்
7. இருதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
8. சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி பெறல்

($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)

v) (அ) 'செயற்றிறன் மதிப்பீடு' என்பது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) 'திறன் மதிப்பீட்டு திரட்டை' (Skill inventory) பராமரிப்பதன் மூலம் வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(அ) ஊழியர் தமது வேலைப்பணிகளை எந்தளவிற்குச் சிறப்பாக நிறைவேற்றுகின்றார்கள் என்பதைக் கண்டறிந்து அறிக்கைப்படுத்தும் செயன்முறைகள். (02 புள்ளிகள்)

(ஆ)

1. திறன் இடைவெளியை இனங்காணல்
2. பயிற்சி, அபிவிருத்தித் தேவைகளை இனங்காணல்
3. தற்போதைய ஊழியர்களின் திறன்களை இனங்காணலும் மதிப்பிடலும்
4. பயிற்றப்பட்ட ஊழியர்களை தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கு
5. மரபுரிமையை இனங்காண்பதற்கு
6. ஊழியர்களுக்கு பதவியுயர்வினை வழங்கும் போது பயன்படுத்த

(1 x 2 = 02 புள்ளிகள்)

(v) (அ) இக்கம்பனியின் இலாப நட்டமற்ற புள்ளி அலகுகளிலும் ரூபாவிலும் எவ்வளவாகும்? (02 புள்ளிகள்)
(ஆ) கம்பனியானது 15 அலகு மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யுமாயின், அதன் இலாபத்தினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(v) (அ) இலாப நட்டமற்ற புள்ளி (அலகுகளில்) $= \frac{\text{மொத்த நிலையான கிரயம்}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$

$= \frac{10,000,000-350,0000}{650,000}$

$\frac{6500000}{650000}$ — 1 புள்ளி

= 10 அலகுகள் (01 புள்ளி) செய்முறை

இலாப நட்டமற்ற புள்ளி (ரூபாயில்) = 10 x 10,000,000

= ரூபா 100,000,000/= — 1 புள்ளி

(01 புள்ளி)

(ஆ) இலாபம் = மொத்த வருமானம் – மொத்த செலவு

(3500000x15)

= 150,000,000 – (65,000,000 + 52,500,000) செய்முறையுடன் பெறுமதி – 1 புள்ளி
= 150,000,000 – 117,500,000
= 32,500,000 (02 புள்ளிகள்)

(i) (அ) 'திரவ விகிதத்தினை' வரையறுக்க. (02 புள்ளிகள்)
(ஆ) வணிகம் ஒன்றுக்கு திரவ விகிதத்தின் அனுகூலங்கள் இரண்டினை விளக்குக. (02 புள்ளிகள்)
(ii) (அ) வணிகம் ஒன்று காசுப் பாதீட்டினைத் தயாரிப்பதனால் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) இலங்கை மத்திய வங்கியின் 'வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச்சந்தை' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(i) (அ) குறுங்கால நிதிக் கட்டுப்பாடுகளுக்கு / பொறுப்புகளுக்கு முகங்கொடுப்பதற்கான இயலுமையைச் சுட்டிக்காட்டும் விகிதம் திரவ விகிதமாகும். (02 புள்ளிகள்)

(ஆ)

1. வணிகத்தின் குறுங்காலக் கடன் தீர்க்கும் ஆற்றலை அறிந்து கொள்ள
2. வணிகத்தின் திரவத்தன்மையை அறிந்து கொள்ள
3. வணிகத்தின் நிதி தொடர்பான பிரச்சனைகளை இனங்காண
4. சொத்து, பொறுப்புக்களை முகாமை செய்ய
5. வணிகத்தின் நிதியியலுமையைத் தீர்மானிக்க

(1 x 2 = 02 புள்ளிகள்)

(iii) (அ) திறந்த மூல மென்பொருளுக்கும் (Open-source software) உரிமையுடைய மென்பொருளுக்கும் (proprietary software) இடையிலான பிரதான வேறுபாட்டினை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'கணினி நச்சுநிரல்' (virus) என்பது யாது? (02 புள்ளிகள்)

(iii) (அ) **உரிமையுடைய மென்பொருள்:-**

- தனிநபர் அல்லது நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு பணம் செலுத்திய பின் பயன்படுத்த முடியும்
- இந்த மென்பொருளைப் பயனர்களால் மாற்றியமைக்க முடியாது

**திறந்த மூல மென்பொருள்:-**

- பணம் செலுத்தாமல் கிடைக்கின்றது
- மேலும் பயனர்கள் விருத்தி செய்யலாம் மற்றும் மேம்படுத்தலாம்

**(1 x 2 = 2 புள்ளிகள்)**

(ஆ) கணனி நச்சு நிரல் என்பது ஒரு கணனியில் இருந்து மற்றுமொரு கணனிக்குப் பரவக் கூடியதுடன் கணனியின் செயற்பாடுகளையும் பாதிக்கக் கூடிய ஒரு சிறிய நிரலாகும். இத்தகைய நச்சு நிரல்கள் கனணியில் சேகரிக்கப்பட்ட தரவுகளை மாற்றவோ அல்லது அழிக்கவோ கூடியது. **(02 புள்ளிகள்)**

(iv) (அ) சந்தைப்படுத்தல் திட்டத்தின் போட்டிசார் பகுப்பாய்வின்போது முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனம் ஒன்றிற்கு வணிகத் திட்டம் ஏன் அவசியமானது என விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ)

1. சமகாலத்தில் காணப்படும் போட்டிநிலை
2. போட்டியாளர்களும் அவர்களது பலங்களும்
3. போட்டி நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கு முயற்சியாளரிடம் உள்ள பலங்களும் பலவீனங்களும்
4. சந்தையினுள் பிரவேசிப்பதிலுள்ள தடைகள் அதாவது கிரயம், காலம், தொழினுட்பம் ஆகிய உரிமைப்பத்திரம், வியாபாரக் குறிபோன்றன.

**($^1/_2$ x 4 = 02 புள்ளிகள்)**

(ஆ)

1. வணிகத் திட்டத்தின் மூலம் வணிகம் எதிர்காலத்தில் எவ்விடத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பனவற்றைச் சுட்டிக்காட்ட
2. வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு வணிகம் தொடர்பான தெளிவொன்றைப் பெற்றுக் கொடுத்தல்
3. வணிகத்திற்குத் தேவையான நிதி வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு
4. வணிகத்திற்குத் தேவையான வளங்களை இனங்காண்பதற்கும் வளங்களைச் சரியான வகையில் ஒழுங்கு முறைப்படுத்தவும்
5. சகலவற்றையும் பொருத்தமானவாறு சுட்டிக்காட்டுவதன் மூலம் எதிர்கால வணிக நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் ஒழுங்கமைப்பதற்கு முடிதல்
6. வணிகத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடியதாகவிருத்தல்
7. வணிகத்தின் பதவிகளுக்கான ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்ய உதவியாகவிருத்தல்
8. மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தல் இலகு

**(ஏதேனும் 2 விடயங்களைக் குறிப்பிட்டு விளக்க 02 புள்ளிகள்)**

8. (i) (அ) [illegible] (02 பு)
(ஆ) [illegible] (02 பு)

8 (i) (அ)

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]

($^{1}/_{2}$ x 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. விரிவானது
2. நெகிழ்வுத் தன்மை கொண்டது
3. இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடியது
4. [illegible] கூடியது
5. இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியது
6. நம்பகத் தன்மை கொண்டது
7. சரியானது
8. காலத்திற்குப் பொருத்தமானது
9. குறைந்த செலவு
10. முழுமையானது
11. பொருத்தமானது

($^{1}/_{2}$ x 4 = 02 புள்ளிகள்)

(ii) (அ) தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதன் மூலம் [illegible] இரண்டினை விபரிக்குக. (02 புள்ளி)
(ஆ) கோவை மாற்றல் நடப்பொழுங்கை (File Transfer Protocol) விளக்குக. (02 புள்ளி)

(ii) (அ)

1. விரைவானது
2. நம்பகமானது / செம்மையானது
3. நெகிழ்வுத் தன்மையானது
4. நம்பகத்தன்மையானது
5. கூடிய அளவிலான தரவுகளை [illegible]
~~6. [illegible]~~
6. 7. குறைவான [illegible]
7. 8. குறைவான செலவு

நன்மைக. $^{1}/_{2}$ x 2 = 01 புள்ளி)
தீமைக. $^{1}/_{2}$ x 2 = 01 புள்ளி)

(ஆ) கோவை மாற்றல் நடப்பொழுங்கு என்பது
[illegible] இணையத்தின் ஊடாக [illegible]
சேவையகம் (server) [illegible]
[illegible]
(02 புள்ளி)

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :
* எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.
* 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் விதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..............................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர | | |

1. பொருட்கள் மற்றும் சேவைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A - புதினப் பத்திரிகைகள் B - சுகாதாரப் பராமரிப்பு (Health care)
   C - உடைகள் D - சட்ட ஆலோசனை
   E - கல்வி F - காய்கறிகள்
   G - சமூக ஊடகம் H - தொலைக்காட்சி
   மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சேவைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?
   (1) A, D, C, G (2) B, D, E, H (3) B, D, E, G (4) D, E, G, H (5) D, F, G, H (......)

2. உற்பத்திக்கு பயன்படும் உள்ளீடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A - காணி B - தேர்ச்சி
   C - ஊழியர்கள் D - தகவல்
   E - அறிவு F - முயற்சியாண்மை
   G - மூலப் பொருட்கள் H - சரக்கிருப்பு
   மேலே தரப்பட்டுள்ளவற்றுள் தொட்டுணர முடியாத உள்ளீடுகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?
   (1) A, D, E, F (2) B, D, E, F (3) B, D, F, H (4) C, E, F, G (5) C, F, G, H (......)

3. வெளிநாட்டுத் தரப்பினருடன் கூட்டுமுயற்சி ஒன்றினை ஏற்படுத்தக்கூடிய கம்பனி ஒன்றின் ஆற்றல் வெளிப்படுத்துவது
   (1) அச்சுறுத்தல் ஆகும். (2) பலம் ஆகும்.
   (3) பலவீனம் ஆகும். (4) வாய்ப்பு ஆகும்.
   (5) பலம் மற்றும் அச்சுறுத்தல் ஆகும். (......)

4. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக இலங்கையில் வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றினை உருவாக்குவதற்கு தேவையான ஆகக் குறைந்த பங்குதாரரின் எண்ணிக்கையானது.
   (1) 1 (2) 2 (3) 3 (4) 7 (5) 10 (......)

5. கம்பனி ஒன்றினால் வழங்கல் சங்கிலியை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய வணிகத் தந்திரோபாயமானது
   (1) முன்னோக்கிய ஒருங்கிணைப்பு (2) கிடையான ஒருங்கிணைப்பு
   (3) நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு (4) பின்னோக்கிய ஒருங்கிணைப்பு
   (5) பல்கூட்டு (Conglomerates) ஒருங்கிணைப்பு (......)

6. பின்வரும் அட்டவணையானது வணிகமொன்றில் அக்கறையுடைய தரப்பினர் சிலரையும் அவர்களது அக்கறைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| அக்கறையுடைய தரப்பினர் | அக்கறைகள் |
|---|---|
| (i) கடன்கொடுத்தோர் | A - தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல் |
| (ii) பங்குதாரர் | B - தொழில் பாதுகாப்பு |
| (iii) அரசு | C - நிதி உறுதித்தன்மை |
| (iv) நுகர்வோர் | D - திரும்பல் |
| (v) ஊழியர்கள் | E - பெறுமதி |

மேலே தரப்பட்டுள்ள வணிகத்தின் மீதான அக்கறையுடைய தரப்பினரின் ஒழுங்கிற்கு அமைவாக அவர்களது அக்கறையினை சரியாகக் காட்டுகின்ற தெரிவு யாது?

(1) B, A, D, E, C (2) B, D, A, E, C (3) C, E, A, D, B
(4) C, D, A, E, B (5) D, C, A, E, B

(......)

7. பின்வரும் அட்டவணையானது அரச வருமான மூலங்கள் சிலவற்றையும் அவற்றைச் சேகரிக்க அதிகாரம் பெற்ற நிறுவனங்களையும் எடுத்துக் காட்டுகிறது.

| வருமான மூலங்கள் | அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் |
|---|---|
| (i) இறைவரிக் கட்டணம் | A - மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் |
| (ii) தீர்வைகள் | B - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் |
| (iii) முற்பண தனியாள் வருமானவரி (APIT) | C - குடிவரவு குடியகல்வு திணைக்களம் |
| (iv) புகைப் பரிசோதனை கட்டணங்கள் | D - உள்ளூராட்சி அமைப்புக்கள் |
| (v) வீசாக் கட்டணம் | E - இலங்கை சுங்கம் |

மேலே தரப்பட்டுள்ள வருமான மூலங்களின் ஒழுங்கிற்கு அமைவாக அவற்றைச் சேகரிக்க அதிகாரம் பெற்ற நிறுவனங்களை சரியாகக் காட்டுகின்ற தெரிவு யாது?

(1) A, D, C, E, B (2) A, E, B, D, C (3) D, C, B, A, E
(4) D, E, B, A, C (5) E, D, B, A, C

(......)

8. பின்வருவனவற்றுள் சூழல் வாய்ப்புக்களை யதார்த்தமாக மாற்றிக் கொள்வதற்கு முயற்சியாண்மையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பிரதான முயற்சியாண்மைக் குணாம்சத்தினைத் தெரிவுசெய்க.

(1) தலைமைத்துவம் (2) புத்தாக்கம் (3) விடாமுயற்சி
(4) ஆர்வம் (5) சுய ஊக்கம்

(......)

9. பின்வருவனவற்றுள் அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம் ஒன்றினால் சேகரிக்கப்படும் நிதி ஈடுபடுத்தப்படுவது.

(1) கம்பனிகளின் நிலையான சொத்துக்களில் ஆகும்.
(2) கம்பனிகளுக்கான கடன் வசதிகளை வழங்குவதற்காகும்.
(3) நடைமுறை மற்றும் சேமிப்பு வைப்புக்களிலாகும்.
(4) முதலீட்டுக் கல்வைகளில் ஆகும்.
(5) நிலையான வட்டிக்காக நிதி நிறுவனங்களில் ஆகும்.

(......)

10. வணிகங்களின் குணாம்சங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - குறுஞ் சந்தை (Niche) குவிமையப்படுத்தல்
B - பூகோளச் செயற்பாடு
C - சந்தை மேலாதிக்கம்
D - சுய வேலைவாய்ப்பு
E - பன்முகப்படுத்தப்பட்ட தீர்மானம் எடுத்தல்
F - முறைசாராக் கட்டமைப்பு
G - சுயாதீனம்
H - மூலதனத்துக்கான வரையறுக்கப்பட்ட வழிகள்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் நுண், சிறிய மற்றும் நடுத்தர (MSM) வணிகங்களின் குணாம்சங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ள சரியான தெரிவு யாது?

(1) A, C, D, G, H (2) A, D, F, G, H (3) B, C, E, F, H
(4) B, D, F, G, H (5) C, D, E, F, G

(......)

11. இலங்கை மத்திய வங்கியின் மெய் நேர மொத்த தீர்ப்பனவு முறைமையாவது (RTGSS)

(1) நிகழ்நிலையல்லாத (Off-line) நிதி மாற்றல் முறைமை
(2) இலத்திரனியல் (Electronic) நிதித் தீர்ப்பனவு முறைமை
(3) காசோலை பிரதிமைப்படுத்தல் துண்டித்தல் முறைமை
(4) பத்திரங்களற்ற பிணைகள் தீர்ப்பனவு முறைமை
(5) பத்திரங்களற்ற பிணைகள் வைப்பு முறைமை

(......)

(v) (அ) 'தொழிற்படு மூலதனம்' என்றால் என்ன? அது ஏன் வணிகமொன்றிற்கு அத்தியாவசியமானது என்பதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை மத்திய சூழல் அதிகாரசபையிடமிருந்து சூழற் பாதுகாப்பு உரிமத்தைப் (EPL) பெற்றுக்கொள்வதன் மூலம் வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) அன்றாட வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான நிதியின் அளவு (01 புள்ளி)

1. தடைகளின்றி நாளாந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு
2. நடைமுறையல்லாச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு
3. திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு
4. வணிகத்தின் நன்மதிப்பினைப் பாதுகாப்பதற்கு
5. வணிக இடர்களைக் குறைப்பதற்கு

($^1/_2$ x 2 = 01 புள்ளி)

(ஆ)

1. சூழல் பிரச்சனைகளுக்கான சட்டரீதியான பாதுகாப்பு
2. ~~சூழல் மாசைக் கட்டுப்படுத்த~~ 3. தொழினுட்ப வழிகாட்டலைப் பெறல்
4 3. பசுமை உற்பத்திகள் மூலமாக சர்வதேச சந்தையில் போட்டியிட முடிதல்
5 4. சூழல் நேய அணுகு முறையினூடாக சூழலுக்குப் புகை வெளியேற்றலைக் கட்டுப்படுத்தல்.
2. தொழிற்சாலையால் வெளியிடப்படும் கழிவுகளால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்து கொள்ளல்.

(1 x 2 = 02 புள்ளிகள்)

**19.** பின்வரும் வரைபடத்தினைக் கருத்திற்கொள்க.




மேலே தரப்பட்டுள்ள வரைபடத்திற்கு அமைவாக கட்டளையிடப்பட்ட தொகை குறித்த காலத்தில் கிடைக்காவிடினும் நிறுவனத்தின் உற்பத்தியை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு தேவையான சரக்கிருப்பின் அளவு அலகுகளில் எவ்வளவு?

(1) 20 (2) 30 (3) 40 (4) 50 (5) 60 (……)

**20.** பௌதிக விநியோக வழிமுறையுடன் தொடர்புடைய தரப்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - மொத்த வியாபாரி
B - தொழிற்சாலை
C - சில்லறை வியாபாரி
D - முகவர்
E - வாடிக்கையாளர்

பௌதிக விநியோக வழிமுறையின் சரியான ஒழுங்கமைவாவது

(1) A→B→C→D→E
(2) A→B→D→C→E
(3) B→A→D→C→E
(4) B→D→A→C→E
(5) C→A→B→D→E

(……)

**21.** பொருட்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - தளபாடம்
B - செல்லிடத் தொலைபேசி
C - சஞ்சிகை
D - தங்க ஆபரணம்
E - குளிர்சாதனப்பெட்டி
F - குளிர்பானங்கள்
G - வெதுப்பி (பாண்)
H - தொலைக்காட்சி

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் கடைப் பண்டங்களை மாத்திரம் சரியாக உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?

(1) A, B, C, G, E
(2) A, B, D, E, H
(3) C, D, G, H, E
(4) C, E, G, H, F
(5) D, E, F, G, H

(……)

**22.** வணிகமொன்றின் அக மற்றும் நேர் நிதி மூலத்திற்கான உதாரணம் ஒன்றாக அமைவது எது?

(1) நிறுத்தி வைத்த இலாபம்
(2) சாதாரண பங்குகள்
(3) காரணிப்படுத்தல்
(4) முயற்சிகளுக்கான மூலதனம்
(5) வியாபாரக் கடன்கள்

(……)

**23.** பின்வருவனவற்றுள் இலங்கை அரசினால் மிக அண்மையில் மறுசீரமைக்கப்பட்ட உள்நாட்டு கடன் வகையானது

(1) வணிகத் தாள்கள்
(2) தொகுதிக் கடன்கள்
(3) திறைசேரி உண்டியல்கள்
(4) திறைசேரி முறிகள்
(5) வங்கிக் கடன்கள்

(……)

**24.** வேலை ஒன்றுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை கண்டறிதல், இனங்காணுதல் மற்றும் கவர்தல் ஆகிய செயன்முறையினைக் குறிப்பிடுவது

(1) தெரிவு செய்தல்
(2) திட்டமிடல்
(3) ஆட்சேர்ப்பு
(4) உறுதிப்படுத்தல்
(5) தக்கவைத்தல்

(……)

**25.** பின்வரும் அட்டவணையானது வணிகமொன்றின் நிதிசார் தகவல்கள் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறது.

| விவரணம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி (ரூ) | 10 000 | | | ? |
| காசு உள்வருகைகள் (ரூ) | 30 000 | 40 000 | 40 000 | 50 000 |
| காசு வெளிச்செலுத்துகைகள் (ரூ) | 20 000 | 65 000 | 40 000 | 45 000 |

மேலே தரப்பட்டுள்ள தகவல்களுக்கமைவாக ஏப்ரல் மாதத்திற்கான ஆரம்ப காசு மீதி எவ்வளவு?

(1) ரூ 15 000
(2) ரூ 10 000
(3) ரூ 5 000
(4) ரூ (10 000)
(5) ரூ (5 000)

(……)

26. பின்வரும் அட்டவணையானது ஊழியர் வகைகளையும் அவர்களுக்கான விவரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| ஊழியர் வகை | விவரணங்கள் |
|---|---|
| (i) அமைய | A- காலவரையறையின்றி சேவையாற்றுதல் |
| (ii) ஒப்பந்த | B- சோதனை தொடர்பிலான காலப் பகுதியுடன் சேவையாற்றுதல் |
| (iii) நிரந்தர | C- வரையறுத்த காலப்பகுதிக்கு சேவையாற்றுதல் |
| (iv) தகுதிகாண் | D- தேவைக்கு ஏற்ப சேவையாற்றுதல் |
| (v) தற்காலிக | E- விசேட காலப் பகுதிக்கு சேவையாற்றுதல் |

ஊழியர் வகையின் ஒழுங்கிற்கு அமைவாக அதன் விவரணத்தை சரியாக எடுத்துக் காட்டும் தெரிவு யாது?

(1) A, D, E, B, C (2) A, E, C, B, D (3) D, E, A, B, C
(4) D, E, C, B, A (5) E, D, C, A, B
(......

27. ஊழியர் வேலைத் திருப்தி தொடர்பில் சரியான குறிகாட்டியை தெரிவு செய்க.

(1) பதவி உயர்வு (2) முடிவுறுத்தல் (3) விலக்குதல்
(4) இடமாற்றம் (5) வரவின்மை
(......

28. நாணயத்துடன் தொடர்புடைய குணாம்சங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - தொட்டுணரக்கூடியது
B - பூகோளரீதியாக ஏற்றுக்கொள்ளப்படல்
C - தொலைவில் இருந்து கையாளக்கூடியது
D - குறைவான பிரிபடுந்தன்மை
E - தொட்டுணர முடியாதது
F - அதிகமான இடர்
G - குறைவான இடர்
H - அதிகமான பிரிபடுந்தன்மை

பௌதிக நாணயங்களுடன் ஒப்பிடும்பொழுது எண்ணியல் நாணயங்களில் காணப்படும் குணாம்சங்களை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, D, E, G (2) A, C, F, G, H (3) B, C, E, G, H
(4) B, D, E, G, H (5) D, C, E, F, G
(......

29. பின்வரும் அட்டவணையானது நிதிக் கூற்றுகளில் காணப்படும் சொற்பதங்கள் சிலவற்றையும் அவை கணிப்பிடப்படும் முறைகளையும் காட்டுகின்றது.

| சொற்பதங்கள் | முறைகள் |
|---|---|
| (i) தேறிய இலாபம் | A- தேறிய இலாபம் - வருமான வரி |
| (ii) விற்பனை வருமானம் | B- விற்பனை வருமானம் - விற்பனைக் கிரயம் |
| (iii) காலப்பகுதிக்கான இலாபம் | C- ஆரம்ப கையிருப்பு + கொள்வனவுகள் + உட் கொண்டுவருதல் செலவுகள் - (வெளித்திருப்பங்கள் + இறுதிச் சரக்கிருப்பு) |
| (iv) மொத்த இலாபம் | D- மொத்த இலாபம் + செயற்பாட்டு வருமானம் - செயற்பாட்டுச் செலவுகள் |
| (v) விற்பனைக் கிரயம் | E- காசு விற்பனைகள் + கடன் விற்பனைகள் - உட்திருப்பங்கள் |

மேலே தரப்பட்டுள்ள சொற்பதங்களின் ஒழுங்கிற்கமைவாக கணிப்பிடப்படும் முறைகளை சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?

(1) A, D, C, B, E (2) A, E, D, B, C (3) D, E, A, B, C
(4) D, E, B, A, C (5) E, D, A, B, C
(......

30. பின்வருவனவற்றுள் முதலாந்தரத் தரவுகளுக்கான மூலம் எது?

(1) சுயமாக நிரவகிக்கும் அளவையாய்வு
(2) அரச முகவர் அறிக்கைகள்
(3) மத்திய வங்கி அறிக்கைகள்
(4) தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கைகள்
(5) புதினப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்
(......

12. காப்புறுதியில் நட்டஈட்டுத் தத்துவம் பொருந்தாதது
(1) கட்டடக் காப்புறுதிக்கு (2) கடற் காப்புறுதிக்கு (3) தீக் காப்புறுதிக்கு
(4) மோட்டார் வாகனக் காப்புறுதிக்கு (5) ஆயுட் காப்புறுதிக்கு (......)

13. பின்வருவனவற்றுள் அச்சு ஊடகம் ஒன்றின் பண்பு அல்லாதது
(1) பரந்த கவருந்தன்மை (2) காலந்தாழ்த்திய பின்னூட்டல்
(3) சிறந்த கட்புலனாக்கம் (4) தனிப்பட்ட இடைத்தொடர்பு
(5) புவிசார் சிதறல் (......)

14. மீள்சுழற்சி நோக்கத்திற்காக வாடிக்கையாளரிடம் இருந்து மீண்டும் விற்பனையாளருக்கு பொருட்களை நகர்த்தும் செயன்முறையுடன் தொடர்புடைய ஏற்பாட்டியல் (Logistics) நடவடிக்கை யாது?
(1) உள்நோக்கிய (Inbound) (2) வெளிநோக்கிய (Outbound)
(3) விநியோக (Distribution) (4) நேர்மாற்று (Reverse)
(5) மூன்றாந் தரப்பு (Third party) (......)

15. இலங்கை ரூபாவின் பெறுமதியானது ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக வீழ்ச்சியடைந்து செல்கையில் இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அளவுகளில் அது ஏற்படுத்தும் பொதுவான தாக்கத்தினை எடுத்துக்காட்டும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.

| | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | குறைவடையும் |
| (2) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (3) | குறைவடையும் | குறைவடையும் |
| (4) | குறைவடையும் | அதிகரிக்கும் |
| (5) | அதிகரிக்கும் | தாக்கம் இல்லை |

(......)

16. பின்வரும் அட்டவணையானது வெவ்வேறு வகையான முகவர்களையும் அவர்களது வகிபாகங்களையும் எடுத்துக் காட்டுகிறது.

| முகவர்கள் | வகிபாகங்கள் |
|---|---|
| (i) பொறுப்புத்தரகு முகவர் | A - கொள்வனவாளரையும் விற்பனையாளரையும் இணைத்தல் |
| (ii) ஏலவர் | B - தனது பெயரின் கீழ் பொருட்களை வாங்கி விற்றல் |
| (iii) தரகர் | C - கடனுக்கு விற்பனை செய்த பொருட்களுக்கான கொடுப்பனவுக்கு உத்தரவாதமளித்தல் |
| (iv) தரகு முகவர் | D - உயர் விலையினைக் கோருபவருக்கு பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் |
| (v) காரணிகர் | E - தனிப்பட்ட விருப்பத்திற்கு அமைவாக கொள்வனவு, விற்பனையில் ஈடுபடல் |

மேலே தரப்பட்டுள்ள முகவர்களின் ஒழுங்கிற்கு அமைவாக அவர்களது வகிபாகங்களை சரியாகக் காட்டுகின்ற தெரிவு யாது?
(1) B, D, E, C, A (2) C, A, D, B, E (3) C, D, A, E, B
(4) D, C, A, E, B (5) D, C, E, A, B (......)

17. நிறுவனத்தின் மீதான சார்பான பிரதிமையை குவிமைப்படுத்தி கட்டியெழுப்புவதற்கான முகாமைத்துவ உப வகிபாகம் யாது?
(1) கண்காணிப்பாளர் (2) ஊடகப் பேச்சாளர்
(3) பெயரளவுத் தலைவர் (4) தடைகளைக் கையாள்பவர்
(5) வள ஒதுக்கீட்டாளர் (......)

18. பின்வரும் A மற்றும் B ஆகிய கூற்றுகளை கருத்திற்கொள்க.
கூற்று A : வணிகமொன்றின் பிரதான நோக்கங்களில் ஒன்று வளப் பாவனையை வினைத்திறனாகக் கையாள்வது.
கூற்று B : வணிகமொன்றின் பிரதான நோக்கங்களில் ஒன்று எக்கிரயத்திலேனும் வாடிக்கையாளர் திருப்தியினை உச்சப்படுத்துவது.
மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளுள்
(1) A மட்டும் சரியானதாகும்.
(2) B மட்டும் சரியானதாகும்.
(3) A மற்றும் B ஆகிய இரண்டும் தவறானதாகும்.
(4) A மற்றும் B சரியாகும் அதேவேளை B யினூடாக A விபரிக்கப்படுகின்றது.
(5) A மற்றும் B சரியாகும் அதேவேளை B யினூடாக A விபரிக்கப்படவில்லை. (......)

**2.** காந்தன் மற்றும் காசிம் ஆகியோரின் விவசாய வணிகத்தை பங்குடைமை வணிகமாக பதிவு செய்வதற்கு அவர்களது சட்ட ஆலோசகரால் ஆலோசனை வழங்கப்பட்டது. அவர்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை தொடர்பிலான கட்டளை ஒன்றினை அண்மையில் பெற்றுள்ளனர். இக்கட்டளையினைப் பூரணப்படுத்துவது தொடர்பில் அவர்களுக்கு ரூ 5 மில்லியன் மேலதிக முதலீடாகத் தேவைப்படுவதனால் அவர்கள் பின்வரும் மாற்றுவழிகளைக் கருதுகின்றனர்:

- புதிய பங்காளரைச் சேர்த்தல்.
- வரையறுத்த தனியார் கம்பனியாக உருவாக்குதல்.
- வங்கிக் கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல்.

(i) (அ) காந்தனும் காசிமும் தமது வணிகத்தை பங்குடைமை வணிகமாக உருவாக்குவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) காந்தனும் காசிமும் தமது வணிகத்தினை இலங்கையின் 1918 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க வியாபார பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பங்குடைமை வணிகமாகப் பதிவு செய்வதனூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) விவசாய உற்பத்திகளின் உற்பத்திக் கிரயம் அதிகரித்துச் செல்லுமாயின் அது வணிகர்களிலும் நுகர்வோரிலும் எவ்வாறு தாக்கம் செலுத்தும்? (02 புள்ளிகள்)

(ஆ) பங்குடைமை வணிகம் ஒன்றுக்கு பங்குடைமை உடன்படிக்கை காணப்படாதவிடத்து புதிய பங்காளர் ஒருவரை சேர்த்துக் கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய பிரதான நியதியினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) காந்தனும் காசிமும் தேயிலை தொடர்பில் பெறுமதி சேர்க்கையினை மேற்கொள்ளக் கூடிய வழிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) காந்தனும் காசிமும் தமது விவசாய உற்பத்திப்பொருட்களை சர்வதேச சந்தையில் மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடமிருந்து (EDB) பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) பங்குடைமை வணிகம் ஒன்று வரையறுத்த தனியார் கம்பனியிலிருந்து வேறுபடும் பிரதான வழிகள் **நான்கினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் வரையறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) நீண்டகால வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்வதனால் இவ்வணிகம் அனுபவிக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** (i) (அ) 'சமூக முயற்சியாண்மை' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) சமூக முயற்சியாண்மையின் சவால்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) முயற்சியாண்மையாளருக்கும் வணிகர்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வாடிக்கையாளர் ஒருவர் எண்ணியல் (digital) கொடுப்பனவு முறையினூடாக பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு (MSM) வணிகத்தில் இருந்து பேரளவு வணிகம் வேறுபடும் வழிகள் **நான்கினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) 'அடமானக் கடனுக்கும்' 'வங்கி மேலதிகப் பற்றுக்கும்' இடையிலான வேறுபாட்டை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதனால் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) காசோலை அடியிதழ்களில் பதிவுகளைப் பேணுவதன் நோக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'நுண் நிதியிடல்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4.** (i) (அ) ஆயுட் காப்புறுதியின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் **இருவரைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஏற்றுமதிக் கடன் காப்புறுதியினூடாக ஏற்றுமதியாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) வணிக நிறுவனம் ஒன்றுக்கு சமூக ஊடகங்களின் மூலம் கிடைக்கப்பெறும் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் சமிக்ஞைகள் மற்றும் குறியீடுகளின் பிரதிகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) 'சுதந்திர வர்த்தகம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
(ஆ) 'பல்மாதிரிப் (multi-modal) போக்குவரத்து' எனும் சொற்பதத்தினை உதாரணம் ஒன்றினூடாக விளக்குக. (02 புள்ளிகள்)
(iv) (அ) முகவர் மற்றும் விநியோகத்தர் ஆகியோர்களுக்கிடையிலான வேறுபாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) தீர்வை வரித் தடைகள் (TB) எவ்வாறு தீர்வை வரியற்ற தடைகளிலிருந்து (NTB) வேறுபடுகின்றது என்பதை ஒரு உதாரணம் மூலம் விளக்குக. (02 புள்ளிகள்)
(v) (அ) உற்பத்தியாளருக்கு மொத்த வியாபாரம் முக்கியமாவது ஏன் என்பதற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) வணிகர் ஒருவருக்கு நிகழ்நிலை வியாபாரத்தினால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **நான்கினை** விளக்குக. (02 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

**5.** அமானி, மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினை ஸ்தாபித்ததுடன் கல உற்பத்தித் தளஅமைப்பினையும் பயன்படுத்தினார். பல்வகைப்படுத்தப்பட்ட ஊழிய ஊக்குவித்தல் முறைகள் அவரால் பிரயோகிக்கப்பட்டதுடன் தீர்மானம் மேற்கொள்வதில் ஊழியர்களின் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், உற்பத்திச் செயன்முறையில் பிரச்சினைகள் நிகழ்வதற்கு முன்பாகவே திருத்தியமைக்கும் முறை அவரால் பின்பற்றப்பட்டது. தன்னம்பிக்கை, கைத்தொழில்சார் விசேடத்துவம் மற்றும் ஊழிய ஒத்துழைப்பு என்பன அவருடைய முகாமைத்துவத்தின் குணாம்சங்கள் ஆகும்.

(i) (அ) அமானியிடம் காணப்படும் முகாமைசார் திறன்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கைக்கு அமைவாக நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டு அமானியின் தலைமைத்துவப் பாங்கினைப் பெயரிடுவதுடன், உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ii) (அ) உற்பத்திச் செயன்முறையில் அமானி பயன்படுத்தும் கட்டுப்பாட்டு நுட்பத்தினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) குழந்தைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் விளையாட்டுப் பொருட்களில் தரத்தினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உள்ளடக்க வேண்டிய மூலக்கூறுகள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)
(iii) அமானியினால் பிரயோகிக்கக்கூடிய நிதிசார் ஊக்குவிப்பு முறைகள் **இரண்டினையும்** நிதிசாரா ஊக்குவிப்பு முறைகள் **இரண்டினையும்** பெயரிடுக. (04 புள்ளிகள்)
(iv) (அ) இயந்திரங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தொழிற்சாலையில் பயன்படுத்தக்கூடிய முறைகள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)
(ஆ) விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தியில் மீள்சுழற்சிக்குள்ளான மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதனால் அமானி பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)
(v) (அ) 'கலத் தளஅமைப்பு' என்றால் என்ன? (02 புள்ளிகள்)
(ஆ) கலத் தளஅமைப்பின் அனுகூலம் **ஒன்றினையும்** பிரதிகூலம் **ஒன்றினையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** வரையறுத்த ABC மோட்டார் வாகன (தனியார்) கம்பனியானது உயர் சமூக அந்தஸ்துடைய செல்வந்தர்களை இலக்காகக் கொண்டு ஆடம்பர மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. இந்நிறுவனமானது JIT இருப்பு கட்டுப்பாட்டு முறையைப் பயன்படுத்துவதுடன் உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் காணப்படும் உற்பத்திப்பொருட்களுக்கான சந்தை ஆராய்ச்சியினையும் மேற்கொண்டது. கம்பனியின் பிரதான மேம்படுத்தல் ஊடகங்களாக முகநூல் (Facebook), வலையொளி (Youtube), படவரி (Instagram), ரிக்ரொக் (Tiktok) என்பன பயன்படுத்தப்பட்டது. கம்பனியானது மோட்டார் வாகனம் ஒன்றினை ரூபா. 10 000 000 இற்கு விற்பனை செய்யும் அதேவேளை மாறும் கிரயமாக ரூ 3 500 000 இனையும் நிலையான கிரயமாக ரூ 65 000 000 இனையும் கொண்டிருக்கின்றது.

(i) (அ) 'JIT முறை' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு தொடர்பில் JIT முறையினைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)
(ii) (அ) 'இலக்குச் சந்தை' என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)
(ஆ) மேற்குறித்த கம்பனியானது சந்தை ஆராய்ச்சியினை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki
பக். 4 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

**32 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. துரித உணவு விற்பனை நிலையத்தின் உடைமையாளரும் முகாமையாளருமான ஆனந்தி, நிகழ்நிலை முறையினூடாக கட்டளைகளை ஏற்று சுகாதாரமான சேதன உணவுகளை (organic foods) விற்பனை செய்கின்றார். எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதார ஸ்திரமற்றதன்மை, வெளிநாட்டு அங்கீகார வணிகங்களின் போட்டி மற்றும் பிளாத்திக்கு கொள்கலன்களைப் பயன்படுத்துவதற்கான சட்டக் கட்டுப்பாடுகள் போன்றவற்றின் காரணமாக சேதன உணவுகளின் விற்பனையின் அளவு குறைவடைந்தது. இதன் விளைவாக தனது ஊழியர்கள் சிலரை வேலையில் இருந்து தற்காலிகமாக நீக்க அவர் தீர்மானித்தார்.

(i) (அ) ஆனந்தியின் வணிகமானது எந்த உற்பத்தித் துறைக்கு உரித்தானதாகும்? உமது விடைக்கான காரணம் **ஒன்று** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத்தின் உடைமையாளராகவும் முகாமையாளராகவும் ஆனந்தி இருப்பதன் அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) ஆனந்தியினது வணிகத்தின் குணாம்சங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஆனந்தியின் வணிகமானது பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) மேலே தரப்பட்ட சம்பவக்கற்கைக்கு அமைவாக, ஆனந்தியின் வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் பணிச் சூழல் விசைகள் **இரண்டினையும்** பேரண்டச் சூழல் விசைகள் **இரண்டினையும்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஆனந்தியினது வணிகத்தினால் சமூகத்திற்கு நிறைவேற்றப்படக்கூடிய சமூகப் பொறுப்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) இலங்கையின் 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரப்படுத்தல்) பிரமாணங்களுக்கு அமைவாக உணவுப் பொதிகளில் குறிப்பிட வேண்டிய கட்டாயமான தகவல்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) துரித உணவுகளை விற்பனை செய்யும் வெளிநாட்டு அங்கீகார வணிகங்கள் ஆனந்தியினுடைய வணிகத்தின் போட்டியாளர்களாகக் கருதப்படுவது ஏன் என்பதற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) இவ்வணிகத்தினது ஊழியர்கள் சிலரை தற்காலிகமாக சேவையிலிருந்து நீக்கியது, தொடர்ந்து சேவையாற்றும் ஊழியர்களின் மீது தாக்கம் செலுத்தும் வழிகளை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இழந்த விற்பனைகளை மீட்பது தொடர்பில் ஆனந்தி அமுல்படுத்தக்கூடிய தந்திரோபாயங்கள் **இரண்டினைப்** பரிந்துரை செய்க. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

(iii) (அ) மேற்குறித்த கம்பனியினால் சந்தையை துண்டமாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய அடிப்படையினைப் பெயரிடுவதுடன் உமது விடைக்கான காரணம் **ஒன்றினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சந்தைத் துண்டமாக்கலின் ஊடாக கம்பனி பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) முகநூல், வலையொளி, படவரி மற்றும் ரிக்ரொக் என்பவை குறித்து நிற்கும் சந்தை மேம்படுத்தல் முறையினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் அவதானிக்கக்கூடிய குணாம்சங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) இக்கம்பனியின் இலாப நட்டமற்ற புள்ளி அலகுகளிலும் ரூபாவிலும் எவ்வளவாகும்? (02 புள்ளிகள்)

(ஆ) கம்பனியானது 15 அலகு மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யுமாயின், அதன் இலாபத்தினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

7. (i) (அ) 'திரவ விகிதத்தினை' வரையறுக்க. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகம் ஒன்றுக்கு திரவ விகிதத்தின் அனுகூலங்கள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) வணிகம் ஒன்று காசுப் பாதீட்டினைத் தயாரிப்பதனால் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் 'வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச்சந்தை' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(iii) (அ) கம்பனி ஒன்றில் மிகை ஊழியர் ஏற்படுத்தும் தாக்கத்தினை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழிய மனத்தாங்கலை இனங்காண்பதற்கு நிறுவனம் ஒன்று பயன்படுத்தக்கூடிய முறைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) ஊழியர்களுக்கு எதிராக தொழில்தருனரால் எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் (ETF) அங்கத்தவர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) 'செயற்றிறன் மதிப்பீடு' என்பது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) 'திறன் மதிப்பீட்டு திரட்டை' (Skill inventory) பராமரிப்பதன் மூலம் வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

8. (i) (அ) தரவுகளைச் சமர்ப்பிக்கக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சிறந்த தகவல் ஒன்றின் குணாம்சங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) தகவல் தொழினுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனம் ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) 'கோவை மாற்றல் நடப்பொழுங்கை' (File Transfer Protocol) விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) திறந்த மூல மென்பொருளுக்கும் (Open-source software) உரிமையுடைய மென்பொருளுக்கும் (proprietary software) இடையிலான பிரதான வேறுபாட்டினை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'கணினி நச்சுநிரல்' (virus) என்பது யாது? (02 புள்ளிகள்)

(iv) (அ) சந்தைப்படுத்தல் திட்டத்தின் போட்டிசார் பகுப்பாய்வின்போது முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனம் ஒன்றிற்கு வணிகத் திட்டம் ஏன் அவசியமானது என விளக்குக. (02 புள்ளிகள்)

(v) (அ) 'தொழிற்படு மூலதனம்' என்றால் என்ன? அது ஏன் வணிகமொன்றிற்கு அத்தியாவசியமானது என்பதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை மத்திய சூழல் அதிகாரசபையிடமிருந்து சூழற் பாதுகாப்பு உரிமத்தைப் (EPL) பெற்றுக்கொள்வதன் மூலம் வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!